# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF Judicial Magistrate No.1 Court, Sivakasi
## STC No. 555/2023

Deposition of the witness for Defence **DW1**

| | | |
|---|---|---|
| Name | : | **திருமதி. சாந்தி** |
| Husband Name | : | **கிருஷ்ணகுமார்** |
| Age | : | |
| Village and Taluk | : | |
| Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (01.04.2026)

**<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை</u>**

1. நான் மதுரையில் பொன்மேனி என்ற இடத்தில் குடியிருந்து வருகிறேன். சக்திபாலாஜி எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வருகிறேன். அந்த நிறுவனத்தின் உரிமையாளர் நான்தான். இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள பாலாஜி பேக்கிங் இண்டஸ்ட்ரிஸ் என்ற நிறுவனத்தைத் தெரியும். மேற்படி நிறுவனத்துடன் வரவு செலவு முழுவதையும் என்னுடைய கனரா வங்கி மூலம் RTGS மற்றும் NEFT ஆகியவற்றின் மூலமாகத்தான் செய்துள்ளேன். மேற்படி கனரா வங்கியில் உள்ள வங்கி கணக்கு எனக்கு OD அக்கவுண்ட் மற்றும் கரண்ட் அக்கவுண்ட் ஆகும். புகார்தாரர் நிறுவனத்தில் நான் பேப்பர் பிளேட் செய்வதற்கான மெட்டீரியல் வாங்கி உள்ளேன்.

2. எனது நிறுவனத்தில் பேப்பர் பிளேட் மற்றும் பேப்பர் ரோல் ஆகியவை தயார் செய்கிறேன். புகார்தாரர் நிறுவனத்துடன் மேற்படி உறவு முறை தவிர வேறு எந்த உறவும் முறையும் கிடையாது. நான் குறிப்பிட்டுள்ள கனரா வங்கியில் உள்ள கணக்கைத் தவிர வேறு எந்த வங்கியில் இருந்தும் நான் புகார்தாரருக்கு பிசினஸ் தொடர்பாக பணம் எதுவும் கொடுத்தது கிடையாது.

அனைத்து வியாபார தொடர்பிற்கும் மேற்படி வங்கி கணக்கை தான் நான் பயன்படுத்தி உள்ளேன். எதிரி எனக்கு அனுப்பிய அறிவிப்பு தேதி எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் அது 2023 ஆம் வருடம் என்று நினைக்கிறேன். எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை மூன்று இடங்களில் உள்ள வெவ்வேறு முகவரிக்கு அனுப்பினார்.

3. மேற்படி அறிவிப்பை சிக்கந்தர் சாவடி என்ற முகவரிக்கு வந்ததை எனது கணவர் வாங்கினார். அதற்கு பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் ஆனால் அந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. தற்போது பதில் அறிவிப்பை தாக்கல் செய்கிறேன். (**மேற்படி பதில் அறிவிப்பு மற்றும் அதை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை ஆகியவை எ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி அறிவிப்பை புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் கண்ணன் என்பவருக்கு அனுப்பினோம். மேலும் பாலாஜி பேக்கேஜிங் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தில் உள்ள மேலாளர் காசி விஸ்வநாதனுக்கும் அனுப்பினோம். மேற்படி மேலாளர் காசி விஸ்வநாதனை நான் தற்போது வரை நேரில் பார்த்தது கிடையாது. நீதிமன்றத்தில் வைத்து மட்டும்தான் பார்த்துள்ளேன்.

4. என்னுடைய சிட்டி யூனியன் வங்கி கணக்கு எண்.116001000626699 என்ற வங்கி கணக்கிற்குரிய பாஸ்புக் தாக்கல் செய்கிறேன். (**மேற்படி பாஸ் புக் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). என்னுடைய கனரா வங்கி கணக்கு எண். 6200140000774 வங்கி கணக்கிற்குரிய 2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்கிறேன். (**மேற்படி வங்கி கணக்கு ஸ்டேட்மெண்டுகள் எ.சா.ஆ.3 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**).

5. எனது கணவர் கணேஷ் பைனான்ஸ் என்ற இடத்தில் இருசக்கர வாகனத்திற்காக கடன் வாங்கி இருந்தார். அதற்காகத்தான் இந்த வழக்கில் புகார்தாரர் குறிப்பிட்டுள்ள சிட்டி யூனியன் வங்கி கணக்கிற்குரிய காசோலையை நிரப்பாமல் கொடுத்திருந்தேன். கணேஷ் பைனான்ஸ் என்ற இடத்தில் கடன் வாங்கியதை காட்டுவதற்கான கடன் அட்டை தாக்கல் செய்கிறேன். (**மேற்படி கணேஷ் பைனான்ஸ் கடன் அட்டை எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இந்த வழக்கில் புகார்தாரர் தாக்கல் செய்துள்ள காசோலையை நான் கணேஷ் பைனான்ஸ் நிறுவனத்திற்கு தான் கொடுத்தேன் என்பதை காட்டுவதற்கு மேற்படி சிட்டி யூனியன் வங்கி காசோலை புத்தகத்தில் காசோலைகள் வழங்கியது போக உள்ள record slip உடன் கூடிய காசோலை புத்தகத்தை தாக்கல் செய்கிறேன். (**மேற்படி காசோலை புத்தகம் காசோலைகள் இல்லாதது record slip உடன் கூடிய புத்தகம் எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

6. துரைசாமி நகரில் வீடு காலி செய்வதற்காக எனது கணவர் இரண்டு நபர்களை வைத்து பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் ஒரு நான்கு பேர் சரவணன் மற்றும் இரண்டு பேர், பெயர் ஞாபகம் இல்லை. அவர்கள் வந்து வீட்டில் அடுக்கி வைத்திருந்த பொருட்களில் என்னென்ன எடுத்தார்கள் என்று தெரியவில்லை. அப்போதுதான் காசோலையை எடுத்துள்ளார்கள் என்று தெரிந்தது. அதுபோக ரூபாய் 12 லட்சம் பணம் இருந்தது. அதையும் மிரட்டி எடுத்துக் கொண்டார்கள். எனது கணவரை காரில் கடத்திக் கொண்டு சென்று மிரட்டி சுத்தி கொண்டு இருந்தார்கள் அப்போதுதான் காசோலை அவர்கள் கையில் இருந்தது தெரிந்தது.

7. மேற்படி எனது வீட்டிற்கு வந்தவர்கள் பற்றிய விவரங்களை சிசிடிவி பார்த்து தான் தெரிந்து கொண்டேன். மேற்படி சிசி டிவியில் உள்ள

புகைப்படங்களை தாக்கல் செய்கிறேன். சாட்சி 9 புகைப்படங்களை தாக்கல் செய்தார். மேற்படி புகைப்படங்களுக்கு உரிய சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மேற்படி புகைப்படங்கள் சான்றிதழ் தாக்கல் செய்வதற்கு உட்பட்டு தற்காலிகமாக குறியீடு செய்யப்படுகிறது. **(மேற்படி புகைப்படங்கள் எ.சா.ஆ.6 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி புகைப்படங்களை எங்கள் வீட்டில் இருந்த சிசிடிவி யில் இருந்து புகைப்படமாக எடுத்தேன்.

8. ஆரம்பத்தில் புகார்தாரருடன் வாங்கிய பொருள்களுக்கு ரொக்கமாக பணம் கொடுத்துள்ளேன். 2019 ஆம் வருடத்திற்கும் முன்பே புகார்தாரருடன் இருந்த வியாபார தொடர்பை முடித்துக் கொண்டோம். அதற்குப் பின்னர் எந்த வியாபாரமும் இல்லை. ஆனால் பணம் கொடுத்துள்ளேன். அவர்கள் ரூபாய் 12 லட்சம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் அதனால் பணம் எதுவும் கொடுக்க வேண்டியது இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலையில் உள்ள பணத்தை கொடுக்க வேண்டியது இல்லை. இந்த வழக்கு பொய் வழக்கு ஆகும்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

9. புகார்தாரர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM
Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Location: JM No.1 Court, Sivakasi.
Date: 2026.04.01 16:17:49 +0530

Judicial Magistrate No.1,
Sivakasi.